# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Alain, UAE



# மன்னா..

கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி;

**நான் சர்வவல்லமையுள்ள தேவன்**

**நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு,**

நான் உனக்கும் எனக்கும் நடுவாக என்

உடன்படிக்கையை ஏற்படுத்தி,

**உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன்**

ஆதியாகமம் 17:1,2

பொழிவு: 13
ஆகாரம்: 01

JANUARY'2021




கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே !

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான திரு பெயரில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் புதிய ஆண்டின் நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**......நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார். ஆதியாகமம் 17:1,2.**

**....' I am God Almighty,walk before me,and be blameless, that I may make my covenant between me and you, and may multiply you greatly'. Genesis 17:1,2.**

கடவுளின் உடன்படிக்கையின் மூலமாக.......

* கடவுளால் தெரிந்துகொள்ளப் படுகிறோம்.......
* கடவுளால் ஆசீர்வதிக்கப் படுகிறோம்......
* கடவுளால் அங்கீகரிக்கப் படுகிறோம்......

**புதிய ஆண்டு-2021:** திருச்சபையின் மக்களாகிய நாம் இந்த புதிய ஆண்டை காண செய்த நமது ஆண்டவருக்கு உங்களோடு இணைந்து துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து செலுத்துகிறேன். இந்த புதிய ஆண்டில் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும், நமது திருச்சபையும், நாம் வாழும் தேசத்தையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக! இந்த புதிய ஆண்டில் புதிய தரிசனங்களுடன் நமது விசுவாச வாழ்வில் தொடர்ந்து செயல்பட நம்மை அர்ப்பணிப்போம், திருச்சபையின் அனைத்து நிகழ்வுகளிலும் குடும்பமாய் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றோம். நமது திருச்சபையின் வளர்ச்சிப் திருப்பணியிலும் உங்களை இணைத்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து தேசங்களுக்காக, திரு பணிகளுக்காக, குறிப்பாக UAE'ல் உள்ள மக்களுக்காக அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது பிள்ளைகளின் கல்விக்காக ஊக்கமாய் ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்.. Rev. S. P Baskar




## முன்னுரை

**சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த்தங்க பண்ணுகிறீர்கள். சங்கீதம் 4:8**

**In Peace I will both lie down and sleep; for you alone, O Lord, make me dwell in safety. Psalm 4:8**

நான் படுத்துறங்கி விழித்தெழுவேன் (சங்:3:5) இன்று மூன்றாம் சங்கீதத்திலும், "இனி, நான் மன அமைதியுடன் (அ) சமாதானத்தோடே படுத்துறங்குவேன் (சங்:4:8) என்பதும் தொடர்புடையது ஆகும். இது துன்பச் சூழலில் சிக்குண்டபோது தாவீது தமக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கிடையே ஆழ்ந்த விசுவாசத்தோடு (அ) நம்பிக்கையோடு பாடிய பாடலாகும். இனி நான் சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன் (சங்:4:8) என்பது ஆழ்ந்த விசுவாசத்தைக் காண்பிக்கின்றது.

Psalm 4: Perhaps a prayer for relief when some calamity (possibly drought; see v.7) has fallen and many are turning from the Lord to the gods of Canaan, from whom they hope to receive better. See introduction to Ps 3.

4 title See Hab 3:19. For the director of music. Probably a liturgical notation, indicating either that the psalm was to be added to the collection of works to be used by the director of music in Israel's worship services, or that when the psalm was used in the temple

worship it was to be spoken by the leader of the Levitical choir-or by the choir itself (see 1Ch 23:5, 30; 25; Ne 11:17). In this liturgical activity the Levites functioned as representatives of the worshiping congregation. Following their lead, the people probably responded with "Amen" and "Praise the Lord"(Hallelujah); see 1Ch 16:36; Ne 5:13; cf.1Co 14:16; Rev

5:14; 7:12; 19:4. With stringed instruments. See Ps 6; 54-55; 61;67;76 titles. This is a liturgical notation, indicating that the Levites (see previous note) were to accompany the psalm with harp and lyre (see 1Ch 23:5; 25:1,3,6; cf. Ps 33:2; 43:4;71:22; see also notes on Ps 39;42 titles).

## சங் 4:1-ஆண்டவரே, செவிசாய்த்தருளும் (ஜெபம்)

இது ஆழ்ந்த விசுவாசத்துடன் ஆண்டவரை நோக்கி கூப்பிடும் ஜெபம் ஆகும்."என் நீதியின் தேவனே...... எனக்கு செவிகொடும்..... எனக்கு இறங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும் என்பது ஆண்டவரை நோக்கி ஜெபிப்பது ஆகும்.

## சங் 4:2-4-தம் அடியார்க்கு ஆண்டவர் செவி சாய்க்கிறார்.

(V-2) மனு புத்திரரே (அ) மானிடரே இங்கு "மானுட மக்களே" என்ற சொல் எதிரிகளையும் தீமை செய்கிறவர்களின் குறிப்பதாகும் பொய்யை நாடுவீர்கள் "பொய்" என்பது சிலை வழிபாட்டைக் குறிப்பதாகும், இதை வீணாய் நம்பி நாடி செல்பவர்கள் என்பதாகும்.

(V-3) பக்தியுள்ளவராக(அ) அன்பனாக...... என்பது இரக்கம் பெற்றவராக, ஆண்டவரால் தெரிந்துகொள்ள பட்டவர்களாக இருப்பவர்களை குறிப்பதாகும்.

(V-4) "உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்"...... ஆண்டவர் உங்களை தெரிந்துக் கொண்டுள்ளார், நீங்கள் ஜெபிக்கும்போது உங்களுக்கு செவி சாய்கிறார் என்பதை எண்ணி மகிழுங்கள், உங்கள் இருதயத்தை, ஆத்துமாவை சோதித்துப் பாருங்கள் என்பதாகும்.

## சங் 4:5-6 ஆண்டவர் மீது நம்பிக்கை வையுங்கள்.

(V-5) நீதியின் பலிகள்(அ) முறையான பலிகள்.... என்பது ஆண்டவருக்கு விருப்பமான பலிகள் மற்றும் சரியான முறையில் செலுத்தப்படும் பலிகளை குறிப்பதாகும்.

(V-6) கர்த்தாவே உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணும்; என்பது ஆண்டவரே உமது இரக்கத்தை காட்டும் என்பதாகும்.

## சங் 4:7-8 நம்பிக்கை வைப்போருக்கு அமைதியும் மகிழ்ச்சியும்.

(V-7) தானியமும் திராட்சையும் விளைதல் என்பது ஆண்டவர் அருளும் ஆசிர்வாதத்தைக் குறிப்பதாகும்

(V-8) ஆண்டவரே........ நீர் ஒருவரே...... என்பது பிறர் உதவி செய்யாவிட்டாலும் நீர் ஒருவரே எங்களை பாதுகாப்பவர் என்பதாகும். இது ஆண்டவர்மீது நம்பிக்கை உடையவர்களுக்கு அமைதியும், மகிழ்ச்சியும் கொடுப்பவர் என்பதாகும்.

## நிறைவாக

ஆண்டவர்மீது நம்பிக்கையுடன் ஜெபிக்கும்போது ஆண்டவர் நமக்கு துணையாக இருந்து எல்லா ஆபத்துக்கும், தீமைக்கும் விளக்கி நமக்கு சமாதானத்தை, மகிழ்ச்சியை கொடுக்கிறார் என்பதை இந்த சங்கீதம் மூலமாக புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களோடு இருப்பாராக ஆமென்!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்
**Rev. S. P. Baskar**

# ஒரு வருட வேத வாசிப்பு திட்டம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வாரம் 1 | ஆதி 1 – 9 | யோசு 1 – 9 | எஸ்றா 1 – 9 | ஏசாயா 1 - 10 | மத் 1 – 5 | அப் 1 – 10 |
| வாரம் 2 | ஆதி 10 -18 | யோசு 10 -18 | எஸ்றா 10; நெகே 1 - 8 | ஏசாயா 11- 20 | மத் 6 – 10 | அப் 11 – 20 |
| வாரம் 3 | ஆதி 19 – 27 | யோசு 19 - 24; நியா 1 – 3 | நெகே 9 - 13; எஸ்தர் 1 – 4 | ஏசா 21 - 30 | மத் 11 - 15 | அப் 21 - 28; ரோமர் 1 – 2 |
| வாரம் 4 | ஆதி 28 – 36 | நியா 4 – 12 | எஸ்தர் 5 - 10; சங் 1 – 3 | ஏசா 31 – 40 | மத் 16 - 20 | ரோமர் 3 – 12 |
| வாரம் 5 | ஆதி 37 – 45 | நியா 13 – 21 | சங் 4 – 12 | ஏசா 41 - 50 | மத் 21 - 25 | ரோமர் 13 - 16; 1 கொரி 1 – 6 |

# செயலர் மடல்

என்றென்றும் மாறாத ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.. கடந்த வருடம் முழுவதும் நம்மை பாதுகாத்து, செட்டையின் கீழ் மறைத்து நம்மை நடத்தி வந்த நம் கர்த்தாதி கர்த்தர்; நாம் பிரவேசித்து இருக்கிற இந்த புதிய ஆண்டிலும் நம்மை பாதுகாத்து ஆசீர்வதித்து நடத்துவாராக..

கடந்த ஆண்டுகளில் நம்முடன் வாழ்ந்தவர்களில் பலர் இன்று நம்முடன் இல்லை.. அவர்களை காட்டிலும் நாம் வாழ தகுதியுள்ளவர்கள் என்று நாம் எண்ணிட இயலாது; மாறாக அன்பு நிறைந்த ஆண்டவர் ஏதோ ஒரு நோக்கத்துடன் நமது வாழ்நாளில் இந்த புதிய ஆண்டினை கிருபையாக தந்துள்ளார் என்ற எண்ணத்துடன் நன்றியுணர்வுடன் புதிய ஆண்டுக்குள் நடந்திடுவோம்.

கடந்த மாதத்தின் பண்டிகை காலங்களை கிறிஸ்துவுக்குள்ளாக பரிபூரணமாய் கொண்டாடி மகிழ்ந்து இருப்பீர்கள் என்று நம்பி தேவனைத் துதிக்கிறேன். ஆன்லெயின் மூலமாக ஒளிபரப்பபட்ட கிறிஸ்மஸ் குடும்ப பாடல் ஆராதனை, சிறுவர் வேதாகம கிறிஸ்மஸ் நிகழ்வுகள், கிறிஸ்மஸ் கீத ஆராதனை இவையனைத்தும் வெளிக்கொணர ஆசிரியர்களாக, பிள்ளைகளாக, பெற்றோராக, குடும்பமாக எல்லாவகையிலும் ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்து வந்த உங்கள் ஒவ்வொருவருக்கும் திருச்சபையின் சார்பாக நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல் சபையின் ஆலய ஆராதனைகள் அனைத்திலும் உற்சாகமாய் பங்கு பெற்ற அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது திருச்சபைக்காகவும், அதன் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம். இந்த புதிய ஆண்டில் நாம் நடத்த திட்டமிட்டிருக்கிற அனைத்து நிகழ்வுகளுக்காகவும் பாரத்தோடு ஜெபிக்க உங்களை அன்பாய் கேட்டுக் கொள்கிறேன். கர்த்தருக்குச் சித்தமானால்; நாம் திட்டமிட்டிருக்கிற அனைத்து நிகழ்வுகளையும் நடத்துவதற்கு தேவன் கிருபையும் இரக்கமும் பாராட்டி; நமது திருச்சபையின் எல்லா காரியங்களிலும் நம்மை வழிநடத்தி பாதுகாப்பாராக.

நம்பிக்கையின் தேவன் நமக்கு முன்னே சென்று கோணலானவைகளைச் செம்மையாக்கி நம் பாதைகளை சீர்படுத்தி நம்மை நல்வழியில் நடத்திச் செல்வார் என்ற விசுவாசதுடன்.. கிறிஸ்துவின் பணியில் எஸ். சுரேஷ் ராஜன்.



# மகதலேனா மரியாள்

## மாற்கு:16:1-10

மகதலேனா என்பது ஒரு ஊரை குறிப்பதாகும். இது "மிக்தல்" என்ற பதத்தில் இருந்து வந்தவை ஆகும்."மிக்தல்" என்பது தூண் என்று பொருள். மகதலேனா என்ற ஊரில் பிறந்து வளர்ந்ததால் இந்த மரியாளுக்கு மகதலேனா மரியாள் என்று பெயர்.. மரியாள் என்பதற்கு அன்புள்ள பெண், துணிவுள்ள பெண் என்பதாகும். ஆண்டவர் இயேசுவின் பணியில் மிகவும் அதிகமாக பங்கு வகித்தவர் இந்த மகதலேனா மரியாள் என்பதாகும். குறிப்பாக இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதலில் இவர் அதிகமாக பங்கெடுத்தவர் என்பதாகும். இந்த மகதலேனா மரியாளின் திருப்பணிகளை குறித்து நாம் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

### ஆண்டவர் இயேசுவின் மீது அன்பும்-அக்கறையும் கொண்ட மகதலேனா மரியாள் மாற்கு 16:1-3.

யூதர்களின் மரபுப்படி அல்லது பாரம்பரியத்தின் படி இறந்தவர்களின் உடல் அடக்கத்திற்கு பிறகு மூன்று நாட்கள் உறவினர்கள் கல்லறைக்கு செல்வது வழக்கமாக இருந்தது. இயேசுவைப் பொருத்தவரையில் அவருக்கு பணிசெய்த அல்லது அவருடைய அன்புக்கு பாத்திரமாக விளங்கிய பெண்கள் அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு மட்டுமல்ல..... அவரது உடலில் தைலம் அல்லது நறுமணம் பூசுவதற்காக கல்லறைக்கு விரைந்தனர். கல்லறையில் வைக்கப்பட்டிருந்த கல்லை அவர்கள் ஏற்கனவே இயேசுவின் அடக்கத்தின் போது பார்த்து இருந்தார்கள். இருப்பினும் இயேசுவை மீண்டும் பார்த்து அவருக்கு நறுமணத் தைலம் பூசி அவரது உடலை திரு நிலைப்படுத்த அவர்களுக்கு ஆழ்ந்த அன்பு அவர்களை தூண்டுகிறது. இந்த கல்லறைக்கு சென்ற பெண்களில் முதலிடம் வகித்தவர் மகதலேனா மரியாள். எனவே இயேசுவின் மீது அன்பும், அக்கறையும் கொண்டவர் ஆவார்.

### ஆண்டவருக்காக அச்சமின்றி-துணிவுடன் செயல்பட்ட மகதலேனா மரியாள். மாற்கு:16:4-5.

ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்டவுடன் எல்லோரும் ஓடி ஒளிந்துக்கொண்டார்கள். யூதர்களுக்கு பயந்து பூட்டப்பட்ட அறையில் பதுங்கி ஒளிந்துக்கொண்டார்கள். இந்த நிலையில் அச்சமின்றி,துணிவுடன் கல்லறைக்கு

சென்றவர் இந்த மகதலேனா மரியாள். அன்பு, அச்சத்தை அகற்றுகிறது என்பதற்கு அடையாளமாக இருந்தவர். அதிகாலையில் இருட்டைக்குறித்து அச்சமில்லாமல் நறுமணங்களுடன் கல்லறைக்குச் சென்றார். கல்லறையில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பது அதிர்ச்சியாய் இருந்தது. அப்பொழுது வெண்ணாடை அணிந்த தேவதூதர் அவர்களுக்கு சொன்ன செய்தி அவர்களின் அதிர்ச்சியையும், அச்சத்தையும் நீக்கியது. அதன் பின்னரே கல்லறைக்குள் துணிவுடன் சென்றார்கள்.

## ஆண்டவரின் பணி செய்த முதல் பெண் மகதலேனா மரியாள். மாற்கு16:6-8

மகதலேனா மரியாளுக்கு கல்லறையில் சந்தித்த தேவதூதன் தந்த செய்தி ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுந்த செய்தியாகும். சிலுவையில் அறையப்பட்ட இயேசு உயிருடன் எழுப்பப்பட்டார் என்கின்ற மகிழ்ச்சியின் செய்தி ஆகும். இதற்கு தேவதூதன் காண்பிக்கும் அடையாளம் காலியாக காணப்பட்ட கல்லறை, இங்கே இல்லை..... இதோ அவரை வைத்திருந்த இடம் என்பதாகும். இந்த வெற்றியின் செய்தியை இயேசுவின் சீடர்களுக்கு அறிவிப்பதில் முதல் பணிப்பெண்ணாக இருந்தவர் மகதலேனா மரியாள் ஆவார்.

இன்றைக்கு நாமும் ஆண்டவரின் பிறப்பு, மரணம், உயிர்த்தெழுதலின் நற்செய்தியை துணிவுடன் அறிவிக்க அழைக்கப்படுகிறோம்.

உங்கள் அனைவருக்கும் புதிய ஆண்டின் நல் வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன்

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில் உங்கள் ஆயிரம்மா.....
Mrs. E. Nancy Baskar





# கர்த்தரைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்

ஆமோஸ் 5:6

நம்மால் முடியாது என்று சரணடையும்போது, கிருபை நிறைந்த நமது ஆண்டவர் நமக்காக எல்லாவற்றையும் செய்து முடிக்கின்றவர். அவரது வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய நமக்கு முடியாவிட்டாலும் அதைக்கூட நாம் அவரிடம் கொண்டுசெல்லலாம். நமது பாவ எண்ணங்களை நம்மால் அழிக்க முடியாது என்று உணர்ந்து அதையும் அவரிடம் கொண்டுசெல்லலாம். அவர் நிச்சயம் உதவி செய்வார்; விடுதலை தருவார். தடைகள் நீங்கப்பெற்று, பிதாவோடு நாம் ஒப்புரவாக்கப்பட்ட படியால், எந்நேரத்திலும் எந்த சூழ்நிலையிலும் நாம் அவரை நோக்கிக் கூப்பிடுகிற பெரிய சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். பின்னர் ஏன் நம் வாழ்வை வீணடிக்கவேண்டும்? அவர் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கையோடு அவரிடமே திரும்பவேண்டும் அல்லவா!




கர்த்தர் தாம் செய்கின்ற எதையும் சொல்லாமல் செய்கிறவர் அல்ல. வேதாகமம் முழுவதுமே அதற்குச் சாட்சி பகருகின்றது. இஸ்ரவேல் என்ற வட ராஜ்யத்துக்கு, அவர்களது பாவத்தையும், மனந்திரும்பவேண்டியதன் அவசியத்தையும் கர்த்தர் உணர்த்திக்கொண்டே இருந்தார். முக்கியமாக ஆமோஸ் கி.மு.760-750ஆம் ஆண்டு வரைக்கும் வரப்போகின்ற நியாயத்தீர்ப்பைக் குறித்து இஸ்ரவேலை மிகவும் எச்சரித்தான். ஆனால், இஸ்ரவேல் கேட்கவில்லை. ஓசெயா கி.மு.732ல் ராஜாவானான். இவனே இஸ்ரவேலின் கடைசி ராஜா. செய்யத்தகாத காரியங்களை இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக இரகசியத்தில் செய்தது" (2'இராஜா.17:9) அவர்களுடைய பாவம் இப்படியாகத் தொடர்ந்தது. இறுதியில் கி.மு.722 அளவில் அசீரியா வந்து இஸ்ரவேலைச் சிதறடித்து சிறைப்பிடித்துச் சென்றனர் என்பது சரித்திரம்.

என்னைத் தேடுங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள்" என பிழைக்கும் வழியைத் தானே கர்த்தர் கூறுகிறார். எந்தவொரு துன்மார்க்கன்கூட அழிவுக்குட்படுவது அவர் சித்தமல்ல. தமது சாயலில் படைக்கப்பட்ட மனுஷர் அத்தனைபேரும் அவரது பிள்ளைகளே. அவர் நம்மை நேசிக்கிறார். பாவத்திலிருந்து நம்மால் மீள முடியாது என்றுதானே தாமே மனுஷனாய் உலகிற்கு வந்து, இரத்தம் சிந்தி நம்மை மீட்டுக்கொண்டார். இந்தப் பெரிய கிருபையைப் பெற்றிருக்கிற நாம், இன்னமும் மனந்திரும்பாமல் இருப்பது எப்படி? இரகசியத்தில்" அல்லது இரகசியமாக" நாம் செய்வது என்ன? கர்த்தரிடத்தில் இன்றே திரும்புவோமா?

**தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்க லாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும் (சங்.19:12,13).**

ஜெபம்: அக்கினி ஜுவாலை போன்ற கண்களை உடையவரே, உமது பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை. முழுமனதோடும், சுத்த இருதயத்தோடும் கர்த்தரைத் தேட முடியாதபடி உள்ள தடைகளை அகற்றி எங்களை தூய்மையாக்கும். இயேசுவின் நாம த்தில் பிதாவே. ஆமென்.

Youth Fellowship




கடந்த பல நூற்றாண்டுகளாக, விஞ்ஞானத்தின் தர்க்க ரீதியான காரணத்திற்கும், வரலாற்றில் மிக முக்கியமான புனித நூலாக பைபிளை பாதுகாக்கிறவர்களின் விசுவாசத்திற்கும் இடையிலான போராட்டம் நடந்து கொண்டே தான் இருக்கிறது. விஞ்ஞானத்தையும், பைபிளையும் நாம் ஒரு தொலைதூர கண்ணோட்டத்தில் வைத்து பார்த்தால், விஞ்ஞானமும் சரி, பைபிள் புத்தகமும் சரி, தங்களின் தனிப்பட்ட மேலாதிக்கத்தை நிரூபிப்பதில் ஒன்றுக்கு ஒன்று சளைத்ததாய் இல்லை.

புனித நூலான பைபிள் உண்மையிலேயே விஞ்ஞானத்திற்கும், அறிவியலுக்கு எதிரானதா? பைபிள் மட்டுமின்றி பண்டைய மத நூல்கள் அனைத்துமே அறிவியலுக்கு எதிரானதா? பல நூற்றாண்டுகளாக நிரூபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளை பைபிளும், மற்ற பண்டைய நூல்களும் குறிப்பிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? போன்ற கேள்விகளுக்கான பதிலை ஆராயும் தொகுப்பே இது!

விஞ்ஞானம்: விஞ்ஞானம் எப்போதுமே மாறிக்கொண்டே போகும் ஒரு விடயமாகும். இது வரையிலாக அது எண்ணற்ற தத்துவங்களை நிராகரித்து உள்ளடித்து, நிராகரிக்க உள்ளது மறுகையில் பல தத்துவங்களையும், கோட்பாடுகளையும் நிரூபித்து உள்ளது மற்றும் நிரூபிக்கவும் உள்ளது. இப்படியாக அறிவியல் நிரூபித்த விடயங்களை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதிய பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறினால், பைபிளில் சில விஞ்ஞான உண்மைகளை வெளிப்படுத்தும் குறிப்புகள் இருக்கிறது என்று கூறினால் நம்புவீர்களா? இதோ ஆதாரம்! (இந்த கட்டுரையில் இடம்பெறும் பைபிள் வாசகங்கள் ஆனது ஆங்கலத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பதும் பைபிளில் இருக்கும் படியே இருக்காது என்பதை முன்னரே குறிப்பிட விரும்புகிறோம்.)

உலகம் தட்டையான வடிவத்தில் இல்லை: இதை சொன்னால் சிலர் ஆச்சரியப்படுவார்கள், ஆனால் உண்மை என்னவெனில் நாம் வாழும் இந்த கிரகத்தின் வடிவத்தை பைபிள் குறிப்பிடுகிறது. கற்பனையை பறக்க விட வேண்டாம், உலகம்

தட்டையான வடிவத்தில் இல்லை என்று பைபிள் குறிப்பிடுகிறது. பைபிள் கூறுகிறது: அவர் பூமியின் வட்டத்தின் மேலே உள்ள சிம்மாசனத்தில் அமர்ந்து இருக்க, அதின் வாசிகள் வெட்டுக்கிளிகளைப்போல் இருக்கிறார்கள். அவர் பரலோகத்தின் வானங்களை விரித்து, வாழ்வதற்கான கூடாரங்களைப் போல் ஆக்குகிறார் என்கிறது.

**காற்றுக்கு எடை உள்ளது:** மேலும், "ஒளி மற்றும் இருளுக்கு இடையிலான எல்லைக்குள் தண்ணீரின் முகத்தில் அவர் ஒரு அடிவானத்தில் பொறிக்கப்பட்டுள்ளார்." என்றும் கூறுகிறது. அதாவது பைபிள் புத்தகம் ஆனது கிரகத்தின் வடிவைத் தவிர, காற்றுக்கு எடை உள்ளது என்பதையும் குறிப்பிடுகிறது. அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து, வானத்தின் கீழிருக்கிற எல்லாவற்றையும் பார்க்கிறார். கடவுள் காற்றின் எடையையும், தண்ணீரையும் அளந்தார் என்கிறது.

**புவியீர்ப்பு விசை:** மேலும், புவியீர்ப்பு விசைகளின் மூலம் தான் பூமி ஆனது விண்வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் பைபிள் குறிப்பிடுகிறது. பண்டைய நாகரிகங்கள் அனைத்துமே, பல நூற்றாண்டுகளாக பூமி ஆனது உண்மையில் வலிமை வாய்ந்த கடவுளால் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்று நினைத்தனர். உதாரணமாக, கிரேக்கர்கள் பூமியை தாங்குவது அட்லஸ் தான் என்று நம்பினர். ஆனால் பைபிளின் படி, அவர் வடக்கை வெற்று இடத்திற்கு நீட்டினார்; அவர் பூமியை ஒன்றும் இல்லாத இடத்தில் நிறுத்தினார் என்கிறது. உங்கள் கண்களை வானத்துக்கு ஏறெடுங்கள், கீழே இருக்கிற பூமியை நோக்கிப்பாருங்கள்; வானம் புகையைப்போல ஒழிந்துபோம், பூமி வஸ்திரத்தைப் போலப் போலும், அதன் ஜனங்கள் புழுக்களைப்போல மரிப்பார்கள். என் இரட்சிப்பு என்றென்றைக்கும் இருக்கும்; என் நீதி எப்பொழுதும் தோற்காது என்கிறது.

**நிலத்தடி நீரோட்டங்கள்:** "நான் மலைகளின் பாதாளத்திற்குப் போனேன்; பூமியின் தாழ்ப்பாள்கள் என்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது" என்கிறது ஒரு பைபிள் வாசகம். இந்த வாசகம் ஆனது கடலுக்கு அடியில் மலைகளின் இருப்பதை பைபிள் குறிப்பிடுவது போன்று தோன்றுகிறது. தவிர பைபிள் ஆனது தண்ணீர் மற்றும் மழையின் தோற்றம் பற்றியும் வெளிப்படையாக சொல்கிறது. அதாவது, மழை நீரைப் பொழியும் மழையைப் பாய்ச்சுகிறார், மனித இனத்தின் மீது மேகங்கள் ஊற்றுகிறது என்கிற வாசகம் பைபிளில் இடம் பெருக்கிறியாது. பதினெட்டாம் நூற்றாண்டு வரை, ஆறுகள், ஏரிகள், நீரூற்றுக்கள் மற்றும் நீரோடைகள் ஆனது கடலில் இருந்து நிலத்தடி நீரோட்டங்கள் வழியாக தான் உருவாகின என்று கருதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**பைபிள் அறிஞர்கள்:** பைபிள் ஆனது அணுவை பற்றியம் முன்னறிவித்திருக்கலாம் என சில பைபிள் அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள்: விசுவாசத்தினாலே, தேவனுடைய கட்டளையின்படி உருவாக்கப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். இந்த பிரபஞ்சம் காணப்படாத ஒன்றில் இருந்து உருவாகி உள்ளது என்கிற வாசகத்தை அதற்கு எடுத்துக்காட்டாக கூறுகிறார்கள்.





# Corona
## A lesson Learned

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மத்தியில் வேதாகமத்தின் தேவை அதிகரித்திருக்கிறது. உலகமெங்கும் கொரோனா வைரஸ் பற்றிய அச்சம் பரவி வரும் நிலையில், மக்கள் தேவனின் உதவியைத் தேடுவதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இதன் விளைவாக வேதாகமத்தின் நகல்கள் அதிகமாக விற்பனை ஆகின்றன என்று அமெரிக்க வெளியீட்டாளர்கள் கூறுகின்றனர்.

இந்த இக்கட்டான சூழ்நிலைகள் மற்றும் நிதி சிக்கல்களுக்கு மத்தியிலும் கூட, மக்கள் தங்கள் அன்புகுரியவர்களுக்கு பரிசுகளை வழங்குவதற்காக வேதாகமத்தை வாங்கி வருகின்றனர். தேவனுடைய பிரசன்னத்தில் இணைவதற்கும், அவருடைய வார்த்தையை தியானிப்பதற்கும், அமைதியை அனுபவிப்பதற்கும் மக்கள் ஆர்வமாய் உள்ளதல் வேதாகமத்தை வாங்குகிறார்கள் என்று நம்பப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள இந்த காரியங்கள் ஏன் நடக்கிறது என சிந்தித்துப் பார்த்தால் கொரோனா மூலம் தேவன் நம் ஒவொருவருக்கும் மூன்று முக்கிய காரியங்களை கற்று தந்திருக்கிறார். நமக்கு மட்டுமல்ல நம்மை சார்ந்து இருக்கிற, இந்த உலகத்தில் வாழ்கின்ற யாவருக்கும் கற்றுத்தந்த பாடம் இவையே...


## கொரோனா கற்று தந்த பாடம்

வாழ்க்கையின் நிச்சயமின்மை போதித்து இருக்கிறார்.
**UNCERTAINTY OF LIFE**

நம்முடைய செல்வம் நம்மை காப்பாற்றாது என்பதை உணர்த்தி இருக்கிறார்
**VANITY OF RICHES**

மனம்திரும்புதல் தேவை என்பதை உணர்த்தி இருக்கிறார்
**NECESSITY OF REPENTANCE**

# கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மத்தியில் வேதாகமத்தின் தேவை அதிகரித்திருக்கிறது




மேலும், வேதாகமத்தை அச்சிடும் நிறுவனம் தனது புத்தகங்களில் ஒன்றிலிருந்து 100% வருவாயை கொரோனா தொற்றால் பாதிக்கப் பட்டவர்களின் மருத்துவ தேவைக்கு நன்கொடையாக அளிக்கிறது.

இந்நாட்களிலே வேத தியானம் மற்றும் கிறிஸ்தவ செய்திகளைக் கொண்ட இணையத்தளங்களில் பார்வையாளர்களின் எண்ணிக்கை 62% உயர்ந்துள்ளது.

இதன் மூலம், இந்த நெருக்கடி நேரத்திலும் தேவனுடைய வார்த்தை அவருடைய ஜனங்களை தேற்றுகிறது மற்றும் நம்பிக்கை அளிக்கிறது என்பதை காணலாம்.



# December

You did it! Congratulations

### Kidz Colouring

HAZEL HARTLYN
CRASSLIN DEVONA
REAGAN SHAN
KARISS ANGELO
CHRIS GABRIEL
JANIA PRENI
JOHAN SANJO
JEMIMA ASHNI
JASON ERIC

### Word Search

JASON ERIC
JOHAN SANJO
JEREMIAH
JONATHAN

### Christmas Quiz

JASON ERIC
JOHAN SANJO
SHELBINO
JONATHAN

### Cross word

JASON ERIC
SHELBINO
JONATHAN

### Nativity Quiz

ROSHAN

**No Activities for Jan 2021 Get Ready for**

## ARE YOU UP FOR THE CHALLENGE?



# CSI Tamil Parish

## Al Ain, United Arab Emirates




| Sr. | Age | Group Name | Event Type | Theme | Duration (Max) |
|---|---|---|---|---|---|
| 1 | 1 & 3 Years | Kinder | Memory Verse | Psalms 119:1 to 176 | Live Via Zoom |
| | | | Singing | Any Christian Song | 3 min Video |
| | | | Fancy Dress | Anything Biblical | 2 min Video |
| | | | Talent Show | Any Instrumental talents | 3 min Video |
| 2 | 4 Years | Beginner | Memory Verse | Psalms 119:1 to 176 | Live Via Zoom |
| | | | Singing | Any Christian Song | 3 min Video |
| | | | Fancy Dress | Anything Biblical | 2 min Video |
| | | | Talent Show | Any Instrumental talents | 3 min Video |
| 3 | 5 to 7 Years | Primary | Memory Verse | Psalms 119:1 to 176 | Live Via Zoom |
| | | | Singing | Any Christian Song | 3 min Video |
| | | | Fancy Dress | Anything Biblical | 2 min Video |
| | | | Talent Show | Any Instrumental talents | 3 min Video |
| 4 | 8 to 11 Years | Junior and Intermediate | Memory Verse | Psalms 119:1 to 176 | Live Via Zoom |
| | | | Singing | Any Christian Song | 3 min Video |
| | | | Mono Act | Anything Biblical | 3 min Video |
| | | | Talent Show | Any Instrumental talents | 3 min Video |
| 5 | 12 to 16 Years | Senior and Teen | Memory Verse | Psalms 119:1 to 176 | Live Via Zoom |
| | | | Singing | Any Christian Song | 3 min Video |
| | | | Mono Act | Anything Biblical | 3 min Video |
| | | | Talent Show | Any Instrumental talents | 3 min Video |


**We encourage parents to motivate your children to participate on all the competitions on their group**

**"WINNING PRIZE IS NOT IMPORTANT BUT PARTICIPATION FOR THE GLORY OF GOD IS IMPORTANT"**




No Registration Fees for any competitions

**Please register and confirm your participation on or before 31st December 2020.**




Competition Date : 29th January 2021

**Memory Verse Will be LIVE via ZOOM**

Except Memory Verse Competetion; All other competitions to be recorded individually

**Last Date for sending the recorded videos is 15th January 2021**

Prize Distribution Date & Time will be informed later.







## Memory Verse General Guidelines

- Parents are allowed to accompany kinder & beginner students but not to assist them.
- Bible verses are to be in order starting from Psalms 119:1
- Verses without correction qualify one mark.
- Verses with one correction qualifies half (0.5) mark.
- Verses with two correction qualifies quarter (0.25) mark.
- Verses with more than two correction does not qualify any mark.




- Those who attempt to complete all the 176 verses will get a Gold coin if they managed to get 170 marks.
- Also those who get more than 100 Marks & more than 150 Marks will be getting a special prize.

## Singing Guidelines

- With or without Karaoke / Music
- You can see the lyrics and sing
- Any Christian song
- Make the video in Landscape mode, Video Format
- Send the video via Email or handover the video by memory stick on or before 15th Jan 2021.



## Fancy Dress Guidelines



- Kinder , Beginner & Primary
- Less than 2 Min video
- Should be anything Biblical
- Make the video in Landscape mode, Video Format
- Send the video Via Email or handover the video by memory stick on or before 15th Jan 2021



## Mono Acting Guidelines




- Junior, Inter, Senior & Teen
- 3 Min Acting
- Should be Biblical
- Make the video in Landscape mode, Video Format
- Send the video via Email/Whatapp or handover the video by memory stick on or before 15th Jan 2021

## Show us your talent Guidelines

- Kids are encouraged to present their special instrumental talents with 3min video.
- This is the opportunity for kids to present their special talents other than singing and Fancy dress/mono acting.
- All the participants will be rewarded accordingly.








## ஜாக்கா
## 5 - 14

1. யாரை பின் சென்று வா என்றார்?
2. இரவு ஆண்டவரை நோக்கி எங்கு ஜெபம் பண்ணினார்கள்?
3. அழாதே! என்று இயேசு யாரை பார்த்துச் சொன்னார்?
4. எல்லாரையும் வெளியே அனுப்பி வைத்துவிட்டு இயேசு என்ன சொன்னார்?
5. சிஷர்களுடன் தனித்து ஜெபித்த ஆண்டவர் என்ன கேட்டார்?
6. பிசாசுகள் கீழ் படுகிறது என்று எத்தனை பேர் வந்து இயேசுவிடம் சொன்னார்கள்?
7. தென் தேசத்து ராஜஸ்திரி யாருடைய ஞானத்தைக் கேட்க வந்தார்?
8. உங்கள்------------- எங்கே இருக்கிறதோ அங்கே ------------- இருக்கும்.
9. பதினெட்டுப்பேரைக் கொன்ற கோபுரம் எது?
10. ஓய்வுநாளில் குணப்படுத்துவது ஞாயமா என்று இயேசு யாரைப் பார்த்து கேட்டார்?

### டிசம்பர் மாத விடை / எழுதியவர்கள்

1.மாற்கு:11:12, 2.மாற்கு:12:17, 3.மாற்கு:13:17, 4.மாற்கு:14:26, 5.மாற்கு:15:21, 6.மாற்கு:16:3
7.லூக்கா:1:5, 8.லூக்கா:2:25, 9.லூக்கா:3:24, 10.லூக்கா:4:17

திருமதி. நான்சி பாஸ்கர், திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட், திரு. ஜெயபிரதீப் கிரிஸ்டோபர், திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ரோஸ்லின் பாலாஜி, திருமதி. பமீலா டேனியல், திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. ஹெப்சிபாய் நேசமணி, திருமதி. அகஸ்டா லாரன்ஸ், திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. ஜெயின் ராஜவேல்



# January

# Happy Birthday

| | |
|---|---|
| Ms. Joshika Vashni | 2-Jan |
| Mr. Prem Jenifer . A | 2-Jan |
| Mrs. Helina Santhosh | 4-Jan |
| Mstr. Roshan | 8-Jan |
| Mstr. Geovin | 12-Jan |
| Mr. Abinesh Solomon | 16-Jan |
| Mstr. Kevin | 17-Jan |
| Mr. Antony Jesu Rajan | 17-Jan |
| Mr. John Joseph | 18-Jan |
| Mstr. D. L. Derrik | 19-Jan |
| Mstr. Abishek Solomon | 20-Jan |
| Mrs. Dhilomina | 22-Jan |
| Mrs. E. Nancy Angelo | 22-Jan |
| Baby. Zia Miren | 23- Jan |
| Mrs. Ramya Mergaratee | 25-Jan |

# HAPPY Wedding Anniversary

iStock by Getty Images

| | |
|---|---|
| 3-Jan | Mr. Dienshan & Mrs. Divya Sherrin |
| 5-Jan | Mr. Jayan Dharmaraj & Mrs. Helan Hemabai |
| 7-Jan | Mr. Paul Gnana Prabu & Mrs. Nirmala Jenifer |
| 11-Jan | Mr. Belfer John Sigamony & Mrs. Jeyantha |
| 21-Jan | Mr. Havin Heba & Mrs. Jackulin Milka |
| 23-Jan | Mr. David Johnson Premkumar & Mrs. Prema Ruth |
| 30-Jan | Mr. Sathish Kumar & Mrs. Sinduja |




# C.S.I TAMIL PARISH, ALAIN- UAE

EDITOR
THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES
POST BOX. 67747 | TEL: +971 (3) 755 9630 | MOB: 056 7105 082
**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY